*(i)* ***கவனிக்க.***- இவ் வர்த்தமானியின் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனித்தனியாகப் பிரசுரிக்கப்படுகின்றன.
*(ii)* ***கவனிக்க.***- *2018.11.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2097 - 2018 නොවැම්බර් 09 වැනි සිකුරාදා - 2018.11.09
*2097 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1914 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1928 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1935 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1913 - B81467 - 5,403(2018/11)

# பதவிகள் – வெற்றிடம்

## கட்டான பிரதேச சபை

மேல்மாகாண அரச சேவை வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு -2018

மேல்மாகாண அரச சேவையின் கட்டான பிரதேச சபையில் தற்போது பதவி வெற்றிடங்களாக காணப்படும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக தேவையான தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | தரம் | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 01. | முன்பள்ளி ஆசிரியர் | 01 | III | MN - 1 - 2016 (பொ.நி. சு. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 27,140 - 10X300 -11X350 -10X495 - 10X660 - ரூபா 45,540.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ. 27, 140.00, 4 ஆம் படி ஏற்றத்திற்கு வினைத் திறன் காண் தடை தாண்டல் ஒன்றிற்கு உட்படல் வேண்டும். |
| 02. | வாகன ஓட்டுநர் (சாரதி) | 04 | III | PL3- 2016- பொ. நி. சு. 3/2016 இற்கு ஏற்ப ரூபா 25,790 - 10X270 -10X300 -10X330 - 12X350 ரூபா 38,990.00 4 ஆம் படி ஏற்றத்தைப் பெற எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூபா 25,790.00, 4 ஆம் படி ஏற்றத்திற்கு வினைத் திறன் காண் தடை தாண்டல் ஒன்றிற்கு உட்படல் வேண்டும். |
| 03. | நூல் நிலைய உதவியாளர் | 01 | III | |
| 04. | அலுவலக அலுவல் உதவியாளர் | 01 | III | PL1- 2016- (பொ. நி. சு. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 24,250 - 10X250 -10X270-10X300 - 12X330 ரூபா 36,410.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூபா 24,250.00, 4 ஆம் படி ஏற்றத்திற்கு வினைத் திறன் காண் தடை தாண்டல் ஒன்றிற்கு உட்படல் வேண்டும். |
| 05. | காவலாளி | 01 | III | |
| 06. | பணி/களத் தொழிலாளி | 08 | III | |

**01. முன்பள்ளி ஆசிரியர் தரம் III**

**மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :**

1. கல்வித் தகைமைகள் : க.பொ.த (சா.தர) பரீட்சையில் மொழி மற்றும் கணிதம் ஆகிய இரு பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தொழிற் தகைமைகள் : முன் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பது அரசாங்க நிறுவனத்தின் மூலம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் குழந்தைக் கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி பற்றி (06) மாதங்களுக்கு குறையாத பாட நெறி ஒன்றை பூர்த்தி செய்த சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.
3. அனுபவம் : உரிய உள்ளூராட்சி நிறுவனத்தில் தொடக்க சேவை வகுதியில் சம்பளம் பெறுகின்ற சேவையினை நிரந்தரமாக்கப்பட்டு மற்றும் (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலமொன்றினைப் பூர்த்தி செய்திருப்பதோடு இக் காலத்தினுள் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டிராதல் வேண்டும்.

4. ஆட்சேர்ப்பு முறை : எழுத்து மூலம் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப்பரீட்சை மூலம்.

எழுத்து பரீட்சைக்கான பாட விதானங்கள் (கீழே தரப்பட்டுள்ளன)

**திறந்த ஆட்சேர்ப்பு முறை** : மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் போன சந்தர்ப்பங்களில் மட்டும் திறந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

1. கல்வித் தகைமைகள் : க.பொ.த (சா.தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த (உ.தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்திலாவது (சாதாரண பொதுப்பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. தொழிற் தகைமைகள் : முன் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பது அரசாங்க நிறுவனத்தின் மூலம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் குழந்தைக் கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி பற்றி (06) ஆறு மாதங்களுக்கு குறையாத பாட நெறி ஒன்றை பூர்த்தி செய்து சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.
3. அனுபவம் : ஏற்புடையது அல்ல
4. வயது : விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அன்று வயது 18 தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு செய்யும் முறை : எழுத்து மூலம் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப்பரீட்சை மூலம்.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த ஆட்சேர்ப்புக்கான எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்.

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாட விதப்புரை | சித்தி பெறக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது உளச் சார்பு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை | மொழி அறிவு, தர்க்கத் திறன் மற்றும் கணிதத் திறமைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல். | 40% |
| பொது அறிவு | விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிக்கும் வகையிலும் அத்துடன் பொருளாதார, சமூக, கல்வி, விஞ்ஞான, கலாசார அரசியல் மற்றும் விளையாட்டுத் துறைக்கு உரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அன்றாட நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் வகையிலும் அமைந்த பல்தேர்வு வினாப்பத்திரம். | 40% |

**02. சாரதி III ஆம் தரம்**

**திறந்த ஆட்சேர்ப்பு முறை :**

1. கல்வித் தகைமைகள் : க.பொ.த (சா.தர) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ் மொழி உட்பட இரு (02) பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் குறைந்தது ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தொழிற் தகைமைகள் : 1. தனியார்/கூலி வண்டிகளும் நிகர எடை 24 அந்தர்களுக்கு குறைந்தது ஸ்டேசன் வெகன் வண்டிகள் செலுத்தல் பற்றி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் செலுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் ஆட்சேர்க்கும் திகதியன்று குறைந்தது (03) மூன்று வருடத்திற்கு முன் 'சீ' மற்றும் 'சீ1' வாகனத் தொகுதியில் அனுமதிப் பத்தரம் அல்லது புதிய சாரதி அனுமதிப் பத்திரம் படி 'டி' தொகுதியில் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
   2. வீதி ஒழுங்கு விதிமுறை கோவை பற்றி சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.
3. அனுபவம் : அனுதிப்பத்திரம் கிடைத்த பின் சாரதியாக 03 மூன்று வருட அனுபவம் இருக்க வேண்டும். (அனுபவத்தை ஒரு சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
4. உடற் தகைமைகள் : ஆகக்குறைந்தது ஐந்து அடி (5) உயரம் இருக்க வேண்டும். பகல் நேரங்களில் போன்று இரவு நேரங்களிலும் தொழில் புரிய உடல் ரீதியாக தகுந்த நிலையில் இருக்க வேண்டும். சிறந்த கண்பார்வை

உடையவராக இருத்தல் வேண்டும். அரச வைத்தியரால் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயது இற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. பார வாகனங்கள் தொடர்பாக : பார வாகனம் செலுத்துதல் தொடர்பான அனுமதிப்பத்திரம் (நிகர எடை 34 அந்தர் வரையான பாரமற்ற லொரிகளும் பயணிகள் 32 இற்கு குறைவான அளவைக் கொண்டு செல்லக் கூடிய பேருந்துகளுக்கான வாகனம் செலுத்துதல் தொடர்பான அனுமதிப் பத்திரம் அதாவது 'ஏ1' மற்றும் 'சீ 1' தரத்தில் அனுமதிப்பத்திரம் அல்லது வாகனம் செலுத்துதல் தொடர்பான புதிய அனுமதிப் பத்திரப்படி 'பீ' மற்றும் 'டி 1' தரத்தில் அனுமதிப் பத்திரம் அல்லது நிகர எடை 34 அந்தருக்கு மேலான மோட்டார் வாகனங்களும் பார டிரேலர்களும் பயணிகள் 32 இற்கு மேலான அளவைக் கொண்டு செல்லக் கூடிய பேருந்துகளுக்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தரம் 'ஏ' கொண்ட அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அனுமதிப்பத்திரத்தின் படி 'டி' தரத்தில் அனுமதிப்பத்திரம் அடிப்படைத்) தகைமையாக கொள்ளப்படும்.

7. ஆட்சேர்ப்பு முறை : தொழில் சார்ந்த பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை மூலம்.

*தொழிற்சார் பரீட்சை* :

| பாடங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்தி பெறக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. வாகனம் ஓட்டுவதிலுள்ள திறமை | 40 | 20 |
| 2. வீதிச் சட்டங்கள் பற்றிய செயன்முறை அறிவு | 40 | 20 |
| 3. மோட்டார் இயந்திர விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 20 | 10 |

**03. நூல் நிலைய உதவியாளர், அலுவலக அலுவல்கள் உதவியாளர், காவலாளி**
**சேவை வகுதி : ஆரம்பத் தேர்ச்சி அற்ற :**

1. கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரு (02) பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் குறைந்தது ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. உடல் தகைமைகள் : பதவியின் கடமைகளை அமுல்படுத்த தேவையான உடல்நல மற்றும் மனநல தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

*கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :*

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தி பெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்ப்பின் அடிப்படை கல்வித் தகைமையாக தரப்பட்டுள்ள க.பொ.த (சா./த.) பரீட்சையில் சித்தி பெற்றுள்ள 06 பாடங்களும் மற்றும் 02 திறமைச் சித்திகளுக்கு மேலதிகமான சித்தியினைப் பெற்றுள்ள பாடங்களுக்காக பெற்றுக் கொண்டுள்ள சித்திகளுக்காக இரண்டு (02) பாடங்களில் உச்ச அளவின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.<br>- சாதாரண சித்தி 04 புள்ளிகள்<br>- திறமைச் சித்தி 06 புள்ளிகள்<br>- சிறப்புச் சித்தி 08 புள்ளிகள்<br>- அதிசிறப்புச் சித்தி 10 புள்ளிகள் | 20 | 50% |

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தி பெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் நடைமுறை தொடர்பான பொது அறிவு | 75 | 50% |
| சிறந்த ஆளுமை (ஊழியரை நேர்முக பரீட்சைக்கு முகம் கொடுக்கும் முறையையும் ஏனைய விடயங் களையும் கவனத்தில் எடுத்தல்.) | 05 | |

குறிப்பு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறும் திறன்களின் அடிப்படையில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படும். பொது நேர்முகப் பரீட்சையில் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் பரிசோதிக்கப்படும்.

5. வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**04. பணி/களத் தொழிலாளி III ஆம் தரம்**
**சேவை வகுதி : ஆரம்ப தேர்ச்சி அற்ற :**

1. கல்வித் தகைமைகள் : தரம் 08 இல் (9ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. உடற் தகைமைகள் : பதவியின் கடமைகளை அமுல்படுத்த தேவையான உடல்நல மற்றும் மனநல தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தி பெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| ஒரு உள்ளூராட்சி நிறுவனத்தில் தற்காலிக மாற்றீடு ஒப்பந்த அடிப்படையில் பணி புரிந்திருக்கும் சேவைக் காலம் (ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்) | 15 | 50% |
| பதவிக்கேற்ப அனுபவம் பற்றி பெற்றுக் கொண்டுள்ள வேறு சான்றிதழ்கள் | 05 | |
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் நடைமுறை தொடர்பான பொது அறிவு | 75 | |
| சிறந்த ஆளுமை (ஊழியர் நேர்முக பரீட்சைக்கு முகம் கொடுக்கும் முறையையும் ஏனைய விடயங் களையும் கவனத்தில் எடுத்தல்.) | 05 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

குறிப்பு : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறும் திறன்களின் அடிப்படையில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படும். பொது நேர்முகப் பரீட்சையில் சான்றிதழ்களின் மூலம் பிரதிகள் பரிசோதிக்கப்படும்.

5. வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தேவையான வேறு தகைமைகள் :-**

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று மேல் மாகாணத்தில் குறைந்தளவு 3 வருட கால நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
(iii) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(iv) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தேவையான அனைத்து தகைமைகளையும் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல்.

(v) உரிய ஆட்சேர்ப்புப் பிரமாணங்களிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப ஒழுங்கு முறையான எழுத்து மூலம் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சைகளுக்கு உட்படுத்தப்படுவதோடு தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதித்த பின்னர் உயர் புள்ளிகளைப் பெறுவோரிலிருந்து தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(vi) ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு மட்டும் வருகை தந்து அல்லது நேர்முகப் பரீட்சைக்கு மட்டும் உட்படுத்தப்பட்டிருப்பின் விண்ணப்பதாரி ஆட்சேர்ப்பிற்காக பொருத்தமானவர் எனக் கருதப்படல் ஆகாது.

(vii) முன்னரே அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2012.07.25 ஆந் திகதிக்கு கடான பிரதேச சபையில் அனுமதிக்கப்பட்ட ஆளணியினரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் 1950/47 ஆம் இலக்க 2016.01.21 ஆந் திகதிய மற்றும் 1986/27 ஆம் இலக்க 2016.09.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மேல் மாகாண அரசாங்க சேவையில் அதிகாரத்தை வழங்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் பொருந்தாத சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உரியவாறு பதிலீடு செய்யப்படும்.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது ஆகும்.

(ii) குறிப்பிடப்பட்டுள்ளவாறு விதவைகள் /தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(iii) ஆட்சேர்ப்பு வழங்கப்படும் ஊழியர்கள் மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(iv) ஏற்கனவே அரசாங்க/மாகாண சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற ஊழயர்கள் 01 வருட காலத்திற்கு பதில் வேலைக்கு உட்படுவர்.

(v) இதற்கு மேலதிகமாக தாபனக் கோவை, நிதிப் பிரமாணம், மேல் மாகாண அரசாங்க சேவை பிரமாணங்கள், மேல் மாகாண நிதிச் சட்டங்கள், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அடிக்கடி காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் கடான பிரதேச சபையின் செயலாளரினால் அடிக்கடி விதிக்கப்படுகின்ற கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) இதற்கு மேலதிகமாகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை நிபந்தனைகளுக்கும், மேல் மாகாண சபையின் நிதிப் பிரமானக் கோவை நிபந்தனைகளுக்கும், மேல் மாகாண ஆளுநரினால் அடிக்கடி பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள் அல்லாத கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பிறப்பிக்கின்ற கட்டளைகளுக்கும், கடான பிரதேச சபையின் செயலாளரினால் பிறப்பிக்கின்ற உத்தரவுகளுக்கும் அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை :**

(i) இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான மாதிரி விண்ணப்பத்தில் (இலக்கம் 01 தொடக்கம் 2.2 வரையில் முதல் பக்கத்திலும் இலக்கம் 2.3 இலிருந்து 7 வரை இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 8 இலிருந்து மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதமாக) தயாரித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கும் பதவியினை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு 2018.12.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கும் விதமாக "செயலாளர், கடான பிரதேச சபை, தெமங்ஹந்திய" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(vi) தபாலிடலின் போது காணாமல் செல்லல் அல்லது பிழையாக எழுதப்பட்டதன் பின்னர் திருப்பி அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படாததோடு குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(v) யாதேனும் ஒரு விண்ணப்பதாரி பதவி, ஒன்றுக்கு மேல் விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறான விண்ணப்பப்படிவங்களை தயாரித்து நிரப்பி அனுப்பப்படல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்பத்திரங்களுடன் தகைமைகளைப் பரீட்சித்துக் கொள்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்தல் வேண்டும். யாரேனும் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ்;
(ii) கல்விச் சான்றிதழ் அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட அதி உயர் கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட சான்றிதல்கள்;
(iii) தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ்;
(iv) அனுபவம் தொடர்பான சான்றிதழ்;
(v) அண்மையில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை தொடர்பான இரண்டு சான்றிதழ்கள்;
(vi) தேசிய ஆளடையாள அட்டையின் அல்லது செல்லுபடியான, வாகனச் சாரதி அனுமதி அட்டையின் நிழற்படப் பிரதி;
(vii) பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட தமது நிரந்தர வதிவிட பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவினை உறுதிப்படுத்தும் சான்றிதழ். (இச்சான்றிதழ் விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் தினத்திற்கு மேலேயுள்ள 06 மாதங்களுக்கு குறையாத காலமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

**வெற்றிடங்களை நிரப்பும் முறை** :

(i) விண்ணப்பப்படிவத்தனை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அன்று தகைமைகளை முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் எழுத்து மூலப் பரீட்சை அல்லது செயன்முறைப் பரீட்சை ஒன்று மேலே நடத்துவதற்குத் தேவையான பதவிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அல்லது இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களுக்கு ஏற்ப தேவையான ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கிடையே வெற்றிடங்கள் ஏற்றவாறாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(iii) எழுத்து மூலப் பரீட்சையில் அல்லது செயன்முறைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றப்படுவதோடு அங்கு விண்ணப்பப்படிவத்தின் மற்றும் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கிடையே வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(iv) மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் திறந்த விண்ணப்பப்படிவம் பற்றி பரிசீலிக்கப்படும்.

(v) ஏதேனும் விண்ணப்பதாரிகள் இருவருக்கு அல்லது அதற்கு மேற்பட்டோருக்கு சம புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படின் அதற்கிடையே ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர் யார் என்பது பற்றி கட்டான பிரதேச சபை செயலாளரினால் முடிவு செய்யப்படல் வேண்டும்.

(vi) இவ் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக கடான பிரதேச சபை செயலாளர் அல்லது வேறு ஒரு தரப்பினர் அல்லது ஒருவருக்கு விசேடமாக ஏதேனும் தலையீடுகள் மேற்கொள்ளப்படுவதால் எதிர்பார்ப்பு இரத்துச் செய்வதாகக் கருதப்படும்.

(vii) விண்ணப்பப்படிவம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது விண்ணப்பப்படிவம் கோரப்பட்டிருக்கையில் அல்லது இந்த ஆட்சேரப்பு செய்வது தாமதிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு அல்லது அறிவித்தல்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அல்லது மாற்றஞ் செய்வதற்கு அல்லது இரத்துச் செய்வது போன்ற விடயங்கள் கடான பிரதேச சபை செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

(viii) இவ்ஆட்சேர்ப்பு தொடர்பான ஒழுங்கு முறைகள் மேற்கொள்ளப்படாத சகல விடயங்கள் பற்றியதான இறுதித் தீர்மானம் மேற்கொள்வது கடான பிரதேச செயலாளரைச் சார்ந்ததாகும்.

ஆர். எம். எம். டி. ரத்னாயக்க,
செயலாளர்,
கட்டான பிரதேச சபை.

*2018, நவெம்பர் 01.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையின் கடான பிரதேச சபையில்**

............................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

01. சுயவிபரம்

1.1 (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................

(ii) முழுப் பெயர் : ........................................

(iii) நிரந்தர மாவட்டம் : ........................................ பிரதேச செயலாளர் பிரிவு : ........................................

(iv) கிராம அலுவலர் பிரிவு : ........................................ இலக்கம் : ........................................

பெயர் : ........................................

1.2 நிரந்தர முகவரி : ........................................

1.3 தொலைபேசி இல. : ........................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

வழங்கப்பட்ட திகதி : ........................................

1.5. பிறந்த திகதி : ஆண்டு : ........................................ மாதம் : ........................................ திகதி : ........................................

1.6. 2018.12.07 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : ........................................ மாதங்கள் : ........................................ நாட்கள் : ........................................

1.7 பால் (ஆண் / பெண்) : ........................................

திருமணமானவர் / திருமணமாகாதவர் : ........................................

1.8 மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடக் காலம் :

வருடங்கள் : ........................................ மாதங்கள்: ........................................ நாட்கள்: ........................................

1.9. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின், பரம்பரையாகவா? இல்லையாயின், பதிவு செய்யப்பட்டதினாலா என்பது பற்றி : ........................................

02. கல்வித் தகைமைகள்

2.1 விண்ணப்பதாரர் இறுதியாக சித்தியெய்திய வகுப்பு : ........................................

பாடசாலை : ........................................

2.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை

முதலாம் அமர்வு பரீட்சை இல. : ........................................ வருடமும் மாதமும் : ........................................

இரண்டாம் அமர்வு பரீட்சை இல.: ........................................ வருடமும் மாதமும் : ........................................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

2.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை இல. :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

3. தொழில் தகைமைகள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். ) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

4. சேவை அனுபவம் :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

5. ஏனைய தகைமைகள் :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

6. மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்களை சமர்ப்பிப்பதாக உறுதிப்படுத்துகின்றேன்.
6.1 பிறப்புச் சான்றிதழ்
6.2 கல்விச் சான்றிதழ் அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட அதி உயர் கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள்
6.3 தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ்
6.4 அனுபவம் தொடர்பான சான்றிதழ்
6.5 அண்மையில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை தொடர்பான இரண்டு சான்றிதழ்கள்
6.6 தேசிய ஆள் அடையாள அட்டையின் அல்லது செல்லுபடியான வாகனச் சாரதி அனுமதி அட்டையின் நிழற் பிரதி
6.7 பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட தனது நிரந்தர வதிவிட பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
6.8 உங்களது பெயர், முகவரி இடப்பட்ட 9X4 அங்குலம் அளவான கடித உறை.

7. நீங்கள் எப்போதேனும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா?.............................................

8. இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும், பிழையற்றதும் என உறுதியுரைக்கின்றேன். இங்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகளுக்கு அமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யான தகவல்கள் என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

திகதி : ..........................................          ................................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரிக்காக நிறுவனத் தலைவரின் உறுதியுரை :**

மேலேயுள்ள விண்ணப்பப்படிவத்தின் விண்ணப்பதாரியான திரு./திருமதி /செல்வி ..................................... அவர்கள் இதுவரை இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............................................ஆக சேவையாற்றுபவர் ஆகும். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதத்திலும் அல்லது ஒழுக்காற்று தண்டனைகளுக்கு (எச்சரிக்கை விடுத்தல் தவிர்ந்த) உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரை செய்கிறேன்/செய்யவில்லை.

..........................................................................,
*திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.*

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..................................................
பதவி : .............................
திகதி : .........................................

*11-731*

---

### வாரியபொல பிரதேச சபை

வடமேல் மாகாண சபை (அரச சேவை) வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

*வாரியபொல பிரதேச சபையில் வெற்றிடமாகி உள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சியற்ற சேவைப் பிரிவிற்கு உரிய பதவிகளுக்காக வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 2008.11.19 ஆந் திகதியுடையதும் அரைத் தேர்ச்சிப் பெற்ற பதவிகளுக்காக வடமேல் மாகாண ஆளுநர் அவர்களினால் 2009.05.12 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப தகைமைகளை பூர்த்தி செய்துள்ள வாரியபொல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 03 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் நிரந்தரமாக குடியிருப்பவர்களிடத்தில் இருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.*

| | பதவி | சேவைப் பிரிவு | தரம் | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | அலுவலக பணி உதவியாளர் | ஆரம்ப (தேர்ச்சியற்ற) | III | 01 | 3/2016 அரச நிருவாக சுற்று நிருபத்திற்கு அமைய PL1-2016<br>ரூபா 24,250-- 10X250 -10X270-10X300 - 12X330 ரூபா 36,410.00 |
| 02. | தொழில்/கள தொழிலாளர் (பாதை) | ஆரம்ப (தேர்ச்சியற்ற) | III | 04 | 3/2016 அரச நிருவாக சுற்று நிருபத்திற்கு அமைய PL1-2016<br>ரூபா 24,250-- 10X250 -10X270-10X300 - 12X330 ரூபா 36,410.00 |
| 03. | நூலக தொழிலாளி | ஆரம்ப (தேர்ச்சியற்ற) | III | 01 | 3/2016 அரச நிருவாக சுற்று நிருபத்திற்கு அமைய PL1-2016<br>ரூபா 24,250-10X250 -10X270-10X300 - 12X330 ரூபா 36,410.00 |
| 04. | குளாய் கிணறு குளாய் தொழில் நுட்பவியலாளர் | ஆரம்ப (தேர்ச்சியற்ற) | III | 01 | 3/2016 அரச நிருவாக சுற்று நிருபத்திற்கு அமைய PL1-2016<br>ரூபா 25,250-10X270-10X300-12X330- 10X350 - ரூபா 38,450.00 |

***01. அலுவலக பணி தொழிலாளர், தொழில்/கள தொழிலாளர் (பாதை) மற்றும் நூலகத் தொழிலாளி பதவிகளுக்காக) ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் :***

***1. கல்வித் தகைமைகள் :***
*க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும் (விருப்பு பாடம் தவிர)*

***2. ஆட்சேர்ப்பு முறை :***
*உரிய தகைமை உடையவர்களை நேர்முகப் பரீட்சைக்காக அழைத்து நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின்படி தகைமை உடையவர்களை சேர்த்துக் கொள்ளப்படுவர்.*

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**
*இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். 03 ஆண்டு காலத்திற்கு நன்னடத்தை காலமாகும். அக் காலத்தினுள் தமது கடமை, ஒழுக்கம் மற்றும் வரவு மகிழ்ச்சிகரமாக காணப்படுமாயினாலும் முதலாவது வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தால் நன்னடத்தை காலத்தின் இறுதியில் சேவையில்/பதவியில் நிரந்தரம் செய்யப்படும். சுற்றுநிருபத்தின் சட்டத்திட்டங்களுக்கமைய விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு கட்டணம் செலுத்த வேண்டும்.*

***02. குழாய் நீர் குழாய் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் :***

I. **கல்வித் தகைமைகள் :**
*(அ) வெளி விண்ணப்பதாரிகள் :*
*க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர)*

*(ஆ) உள்ளக விண்ணப்பதாரிகள் :*
*மாகாண சபை அரச சேவையில் வாரியபொல பிரதேச சபையில் நிரந்தர பதவி ஒன்றில் சேவையில் உள்ள (PL- 1 சம்பளத் திட்டம் உரித்துடைய) விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

II. **தொழில்நுட்ப திறமை :**
*அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தேசிய பயிற்சி நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலை நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் குளாய் நீர்க் குளாய் தொழில்நுட்பவியலாளர்/குளாய் நீர் தொழில்நுட்பவியல் பற்றிய பயிற்சி சான்றிதழ் (NVQ 2 அல்லது 3 மட்டத்திலான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.)*

III. **அனுபவம் :**
*உரிய துறையில் அரச நிறுவனம் ஒன்றினால்/அரச கூட்டுத்தாபனங்களில் மற்றும் சட்டரீதியான நிறுவனங்களில் அல்லது வேறு அரச நிறுவனம் ஒன்றில் 2 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் பணியாற்றி இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)*

IV. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**
*நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தற்போது பிரதேச சபையில் சேவையாற்றுகின்ற அமய/பதில் /தற்காலிக பணியாளர்களுக்காகவும், நிரந்தர சேவையில் PL1 சம்பளத் திட்டத்திற்கு உரிய பதவியில் உள்ளவர்களுக்கு மேலதிக சலுகை வழங்கப்படும்.*

V. **பொது நிபந்தனைகள் (எல்லா பதவிகளுக்காகவும்) :-**
(i) *விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.*
(ii) *விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ பதிவு செய்தல் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*
(iii) *நல்லொலுக்கமும் சரீர சுகமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.*
(iv) *தண்டணைச் சட்டக்கோவையினால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டு தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.*
(v) *வாரியபொல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 03 ஆண்டு காலம் குடியிருந்தது பற்றி உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரிடம் பெற்றுக் கொண்ட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.*
(iv) *விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள்ளே இவ் ஆட்சேர்ப்பினை காலதாமதப்படுத்துவதற்கோ இவ் அறிவித்தலினை இரத்து செய்வதற்கான அதிகாரம் வாரியபொல பிரதேச சபையின் செயலாளருக்கு உரியதாகும்.*

VI. *பிரதேச சபையில் நிரந்தர பதவியில் உள்ளவர் அல்லது அமய/பதில் /தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ளவருக்கு வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படாததுடன், அவர் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு 05 ஆண்டுகளினுள்*

எச்சரிக்கை தவிர எவ்வித தண்டனைக்கும் உள்ளாகாது இருக்க வேண்டியதுடன் உரிய 05 ஆண்டுகளினுள் எல்லா சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

VII. **விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய முறை :**
எல்லா விண்ணப்பதாரிகளும் இங்க கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2018.11.30 ஆந் திகதிக்கு முன் கிடைக்கும் வண்ணம் "செயலாளர், பிரதேச சபை, வாரியபொல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியினை குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்புச்சான்றிதழ்;
(ii) கல்விச் சான்றிதல்கள்;
(iii) தொழில்நுட்ப திறன்/திறமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ் (அரைத் தேர்ச்சி பதவிகளுக்காக);
(iv) தேசிய ஆள்அடையாள அட்டையின் பிரதி;
(iv) பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்;
(v) குழாய் நீர், குழாய் தொழில்நுட்பவியலாளராக பணி புரிவதற்கு உரிய 02 ஆண்டிற்கு மேற்பட்ட அனுபவம் பற்றிய சான்றிதழ்.

வை. எம். சேனாநாயக்க,
செயலாளர்,
பிரதேச சபை - வாரியபொல.

பிரதேச சபை அலுவலகம்,
வாரியபொல,
2018, ஒற்றோபர் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வாரியபொல பிரதேச சபை**

............................................. பதவிக்கான விண்ணப்பப்படிவம்

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ...............................................
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ...............................................
02. சொந்த முகவரி : ...............................................
03. பிறந்த திகதி : ஆண்டு : ........................................ மாதம் : ....................................... திகதி : ....................................
(அ) 2018.11.30 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் : .................... மாதங்கள் : ................................. நாட்கள்: .....................................
04. பிரதேச செயலாளர் பிரிவு : ...............................................
05. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின், பரம்பரையாகவா? இல்லையாயின், பதிவு செய்யப்பட்டதினாலா? என்பது பற்றி : .....................................................
06. பால் (ஆண் /பெண்) : ...............................................
07. திருமணமானவர் /திருமணமாகாதவர் : ...............................................
08. சித்தியடைந்துள்ள ஆகக்க கூடிய பரீட்சை : ...............................................
09. தொழில்நுட்ப திறமை : ...............................................
10. தொழில் தகைமை : ...............................................
11. உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதா : ...............................................
12. அவ்வாறாயின் தண்டனையின் தன்மை : ...............................................
13. தற்போது பிரதேச சபை சேவையில் உள்ளவராயின் அது பற்றிய விபரம் : ...............................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்று இத்துடன் சான்று பகர்கின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது அல்லது பிழையானது என்று இப்பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவந்தால் நான் தகைமையற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு தெரியவந்தால் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்குவதற்கும் நான் உடன்படுவேன் என்பதும் எனக்கு தெரியும்.

திகதி : ..........................................   ...............................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11-753

**வல்லாவிட பிரதேச சபை**

மேல்மாகாண அரச சேவை வெற்றிடங்களை பூரணப்படுத்துதல்

மேல்மாகாண அரச சேவையின் வலல்லாவிட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகுதி வாய்ந்த மேல் மாகாணத்தில் வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | அலுவலக பணி உதவியாளர் | 01 | PL1 - 2016 ரூபா 24,250 - 10X250 -10X270 - 10X300 -12X330 - ரூபா 36,410.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் 5 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.) |
| 02. | ஔடத கலவையாளர் III | 01 | PL2 - 2016 ரூபா 25,250 - 10X270 -10X300 -10X330 - 12X350 ரூபா 38,450.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இதில் 5 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.)<br><br>அனுபவம் :<br>அரச ஆயுர்வேத மருந்துசாலையில் அல்லது அரசினால் அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்து சாலையில் ஒரு வருடத்திற்கு குறையாத பதவிக்கு தேவையான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.) |
| 03. | முன்பள்ளி ஆசிரியர் III | 01 | MN1- 2016 ரூபா 27,400 - 10X300 -11X350 - 10X490 -10X660 - ரூபா 45,540.00 | (அ). க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சிங்களம்/தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இரண்டு பாடங்களில் திறமை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>(ஆ). க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல். வேண்டும்.(பொது சாதாரணப் பரீட்சை தவிர)<br><br>தொழில் தகைமை :<br><br>முன்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கும் அரச நிறுவனம் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தினால் சிறுவர் கல்வி மற்றும் குழந்தை அபிவிருத்தி தொடர்பாக 6 மாத காலத்திற்கு குறையாத பாடநெறியை கற்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 04. | சுகாதார தொழிலாளர் III | 04 | PL1 - 2016 ரூபா 24,250- 10X250 - 10X270 - 10X300 -12X330 ரூபா 36,410.00. | 8ஆம் வகுப்பு (தரம் 9) சித்தி எய்தியிருத்தல் |

**2. உடல் சார்ந்த தகைமை :-**

பதவியின் கடமையை நிறைவு செய்வதற்கான போதுமான உடல் மற்றும், உள நல தகைமையிருத்தல் வேண்டும்.

**3. தேவையான வேறு தகைமைகள் :-**

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் 3 வருடங்கள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(iii) நல்லொழுக்கமுடைய மற்றும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(iv) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தினால் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.

(v) வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**4. வயது :-**

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**5. ஆட்சேர்க்கும் முறை :-**

முறையாக நேர்முகப்பரீட்சை நடாத்தி அதிகமான புள்ளிகளை பெற்றுக் கொண்ட தொடர்முறைக்கு ஏற்ப வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படும்.

**6. விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல் :**

1. விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2018.11.28 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன் "செயலாளர், வலல்லாவிட பிரதேசசபை, மீகஹாதென்ன " என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

2. விண்ணப்பப்படிவத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் குறித்த பதவியை குறிப்பிடுக.
3. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பவும்.

(i) பிறப்புச் சான்றிதழ்;

(ii) கல்விச் சான்றிதழ்;

(iii) பாடசாலையில் இருந்து விலகிய சான்றிதழ்;

(iv) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்);

(v) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

இவ்விண்ணப்பப்படிவம் கோரப்பட்டபின் அல்லது கோரப்படும் போது அல்லது ஆட்சேர்த்தல், அல்லது இவ் ஆட்சேர்த்தலை கால தாமதமாக்குதல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது மாற்றம் செய்வதற்கான முழுமையான அதிகாரம் வலல்லாவிட பிரதேச சபை செயலாளருக்கே உரித்தாகும்.

உதேனி அத்துகோரல,
தலைவர்,
வலல்லாவிட பிரதேச சபை.

2018, நவெம்பர் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலல்லாவிட பிரதேச சபை**

வலல்லாவிட பிரதேச சபையின் ............................................ பதவிக்காக விண்ணப்பப்படிவம்

01. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :..............................................................................................
02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :..............................................................................................
03. நிரந்தர முகவரி :..............................................................................................
04. கிராம அலுவலர் பிரிவு :..............................................................................................
05. மாவட்டம் : ..............................................................................................
06. பிறந்த திகதி : ஆண்டு : ............................ மாதம் : ................................ திகதி : ....................................
07. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது (2018.11.28):

வருடங்கள் : ............................ மாதங்கள் : ................................ நாட்கள் : ....................................

08. பால் : ஆண் / பெண் : ..............................................................................................
09. திருமணமானவர் / திருமணமாகாதவர் பற்றி : ..............................................................................................
10. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா ? : ....................................................
11. தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

12. தொலைபேசி இலக்கம் :..............................................................................................
13. கல்வித் தகைமை : ..............................................................................................

க. பொ. த. (சா. த.) பரீட்சை -
சித்தியடைந்த வருடம் : சுட்டெண் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட விதத்தில் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இவ் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் ஆட்சேர்த்தலுக்கு முன் அல்லது பின் தெரிய வருமாயின் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்காமல் பதவியிலிருந்து நீக்க முடியும் என்பதை நான் நன்கு அறிவேன்.

.......................................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..........................................

11-922

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வண்ணாத்திவில்லு பிரதேச சபை

அனுமதிக்கப்பட்ட துணைவிதிகளை ஏற்றுக் கொள்ளுதல்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (அனுமதிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 261 ஆவது அதிகாரத்தின் கீழ் 1952 ஆம் ஆண்டின் 06 இலக்க உள்ளூராட்சி மன்ற (அனுமதிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் 2018.09.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தீர்மான இல. 05.4 இன் கீழ், கீழ்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பதை இதனூடாக அறியத்தருகின்றேன்.*

எம்.எம். சமந்த முனசிங்ஹ,
தலைவர்,
வண்ணாத்திவில்லு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வண்ணாத்திவில்லு,
2018, செத்தெம்பர் 26.

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவுடன் (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அதிகாரம் 1952 ஆம் ஆண்டின் 06 இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் (அனுமதிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் (2) ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றத்திற்கு பொறுப்பான அமச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண உள்ளூர் ஆட்சி மன்றத்தின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 16.07.2010 ஆந் திகதிய 1663 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசச் குடியரசு வர்த்தமானியின் IV (அ) பிரிவினால் பிரசுரிக்கப்பட்ட 18.01.2011 ஆந் திகதிய வடமேல் மாகாண சபையினால் உறுதி செய்யப்பட்ட 28.04.2011 ஆந் திகதிய 170.18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதும் பிரதேச சபைகளில் அபாயகரமான மற்றும் அருவருப்பான பாதகமான வியாபார நடவடிக்கைகள், பிரதேச சபை எல்லையினுள் நடமாடும் வியாபாரம், பிரதேச சபை எல்லையினுள் வாகனங்களை நிறுத்தி வைப்பது, பிரதேச சபை எல்லையினுள் நுளம்புகள் மற்றும் நோய்க்காவி கிருமிகளை அழிப்பது, பிரதேச சபை எல்லையில் பாதைகள் மற்றும் வழிகளை அலங்கரிப்பது, பிரதேச சபை எல்லையினுள் வாடி வீடுகள் மற்றும் தரிப்பிடங்கள் தொடர்பான அனுமதிக்கப்பட்ட துணைவிதிகளினால் இந்த பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அமுல்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற (அனுமதிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் (3) ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வண்ணாத்திவில்லு பிரதேச சபை தீர்மானிக்கிறது.*

*11 - 306*

---

## மாவத்தகம பிரதேச சபை

பாதை பற்றிய அறிவித்தல்

*இலக்கம் 2, 075 மற்றும் 2018.06.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள பறகஹதெனிய பிரிவுக்கு உட்பட்ட அமைந்துள்ள வெளிகொடேஹேன என்ற பாதைக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆம் இலக்க சரத்தின் பிரகாரம் எந்தவிதமான எதிர்ப்புக்களும் கிடைக்கப் பெறவில்லை. அதனால் அந்தப் பாதையினை மாவத்தகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக ஏற்றுக் கொண்டு செயற்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுன்றது.*

எஸ். கே. அநுர கமல் பெரேரா,
தலைவர்,
மாவத்தகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவத்தகம
2018, செத்தெம்பர் 10.

*11 - 307*

**தங்கல்ல நகர சபை**

*நகர சபை சட்டவாக்கின் (255 ஆவது அதிகாரம் ) 55 (அ) சரத்தின் பிரகாரம் அறிவித்தல் செய்தல்*

*நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆவது அதிகாரம்) 55அ சரத்தின் பிரகாரம் தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவில் தங்கல்ல நகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதான வீதி, தென் மாகாண சபை உள்ளூராட்சி விடய கௌரவ அமைச்சரால் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் "எஸ். எச். சவோரிஸ் சில்வா மாவத்தை" என்று பெயரிடப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது*

*ரவிந்து வெதஆரச்சி,*
*தலைவர்,*
*தங்கல்ல நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*தங்கல்ல,*
*2018, செத்தெம்பர் 17.*

**அட்டவணை**

*உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : தங்கல்ல நகர சபை*
*மாவட்டம் : அம்பாந்தோட்டை*
*வீதியின் பாவனையில் இருந்த பெயர் : எஸ். எச். சவோரிஸ் சில்வா மாவத்தை*
*புதிதாக இடப்பட்ட பெயர் : எஸ். எச். சவோரிஸ் சில்வா மாவத்தை*
*வீதியின் விபரம் : அம்பாந்தோட்டை வீதியிலிருந்து மெதகெட்டிய வரை வீதி.*

*11-311*

---

**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**

*வரவு செலவுத் திட்ட விபரம் - 2019*

*மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் சரத்து 252 இன் பிரிவு 212 இன் பிரகாரம் தெஹிவளை-கல்கிசை மாநகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விபரம் 21.11.2018 ஆந் திகதி தொடக்கம் 30.11.2018 ஆந் திகதி வரை அலுவலக நேரத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்கு வைக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*நாவலகே ஸ்டான்லி டயஸ்,*
*நகர பிதா,*
*தெஹிவளை - கல்கிசை மாநகர சபை.*

*தெஹிவளை - கல்கிசை மாநகர சபை,*
*2018, நவெம்பர் 16.*

*11 - 374*

---

**கண்டி மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சனசமூக நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் சரத்து*

*கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள சனசமூக நிலையம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையத்தில் செயற்படுவதற்கு 2019 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பப்படிவம் ஒன்றை*

சமர்ப்பித்துள்ளார் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சனசமூக நிலைய அனுமதிபத்திரம் வழங்கும் சரத்தின் 06 ஆம் வாக்கியத்தின் பிரகாரம் இத்தால் அறியத் தருகின்றேன்.

அச்சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் அல்லது சனசமூக நிலையத்திற்கான எதிர்பார்க்கப்படும் தாபனத்தின் அருகாமையில் அல்லது ஏதாவதொரு நபரின் மூலம் சனசமூக நிலையத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாயின் இவ் அறிவித்தலுக்கான வர்த்தமானி பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 04 கிழமைக்குள் எதிர்ப்பிற்கான காரணத்தை எழுத்து வடிவில் இரண்டு பிரதிகள் மூலம் எனக்கு சமர்ப்பிக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

கேசர. டீ. சேனாநாயக்க,
நகர பிதா,
கண்டி மாநகர சபை .

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2018, ஒற்றோபர் 22.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சனசமூக நிலையத்தின் தவிசாளர் அல்லது செயலாளர் | சன சமூகநிலையத்தின் பெயர் | சனசமூக நிலையம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிலையம் |
|---|---|---|---|
| செயலாளர் | செயலாளர் | த கண்டி லேக் கிளப் | இல. 07, சங்கராஜ மாவத்தை, கண்டி |

11 - 416

---

**மாவனல்லைப் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 24(1), 24 (2) ஆம் உறுப்புரையின் கீழான அறிவித்தல் -2019*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சப்ரகமுவ மாகாண கேகாலை மாவட்டத்தில் மாவனல்லைப் பிரதேச சபையினால் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள் பிரதேச சபைக்குச் சொந்தமானது என பிரகடனப்படுத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையினால் அளந்து அடையாளமிடப்பட்ட பாதைகள் சம்பந்தமாக குறிப்பிட்ட இடத்தின் உரிமையாளர் உரிமை கொண்டவர்களால் எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் எதிர்ப்புக்களை முன்வைக்கும் படி அறிவிக்கின்றேன்.

சந்தன குமார ஜயவந்தல,
தவிசாளர்,
மாவனல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவனல்லை,
2018, ஒற்றோபர் 23.

**அட்டவணை 01**

*பாதையின் பெயர் : தாஸ்வத்த பாதையில் இருந்து பாட்டகம வரையிலான பாதை*
*பாதையின் நீளம் : 850 அடி*
*பாதையின் அகலம் : 08 அடி*
*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை : கொட பாதையில் இருந்து தாஸ்வத்த டெலவ்கே பாதை வரை.*
*கிராம அலுவலர் பிரிவு : இல. 18 பீ, தாஸ்வத்த*

| இடது பக்க காணியின் உரிமையாளர்களின் பெயர் | காணியின் பெயர் | வலது பக்க காணியின் உரிமையாளர்களின் பெயர்கள் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| ஜீ. ஜீ. பொடினேரிஸ் | தாஸ்வத்த பொரலுவ | ஜீ. ஜீ. அஜித் குமாரசிங்க | தாஸ்வத்த பொரலுவ புரானேபேல பஹல கொடச |
| ஜீ. ஜீ. குலதுங்க | வேபத கொடுவே குபுர | ஜீ. ஜீ. சிறிசேன | வேபத கொடுவே குபுர |
| ஜீ. ஜீ. ஆர். எஸ். வீரரத்ன | வேபத கொடுவே குபுர | ஜீ. சிறிசேன | மீகொன் கொடுவ |
| ஜீ. ஜீ. சிறிசேன | வேபத கொடுவே குபுர | | |
| ஜீ. சிறிசேன | மீகொன் கெடுவ | | |
| ஜீ. ஜீ. பியசேன | முதுகெலியாதென்ன | | |
| ஜீ. ஆர். ரூபசிங்க | முதுகெலியாதென்னே ஹேன | | |
| ஜீ. ஜீ. இந்திராணி மல்லிகா | முதுகெலியாதென்னே ஹேன | | |

**அட்டவணை 02**

*பாதையின் பெயர் : நிகதென்ன வத்த பாதை*
*பாதையின் நீளம் : 120 மீற்றர்*
*பாதையின் அகலம் : 2.74 மீற்றர்*
*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை : ஹிகுல ரஜமஹா விகாரை பாதையில் இருந்து நிகதென்ன வத்த வரை*
*கிராம அலுவலர் பிரிவு : ஹிகுல*

| இடது பக்க காணியின் உரிமையாளர்களின் பெயர் | காணியின் பெயர் | வலது பக்க காணியின் உரிமையாளர்களின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
*(2)* *விட்டம் 26 அங்குலத்திற்கு பார்க்கிலும் குறைந்த சில்லு உள்ள சிறுவர் வாகனங்கள், வில்பரோ, இன்னும் தனியார் இடங்களில் மாத்திரம் வியாபாரத்திற்காக மாத்திரம் உபயோகிக்கும் கை வண்டி மற்றும் வியாபார அலுவலுக்காக உபயோகிக்கப்படாத கை வண்டி ஆகியன மேற்கூறப்பட்ட கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படும்.*

*11-358/5*

---

**சிலாபம் பிரதேச சபை**

வியாபார வரி விதித்தல் - 2019

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-VII ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*2019 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட இவ் வியாபார வரியினை, இவ் ஆண்டில் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்றும் மேலும் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*டபிள்யூ. சரத் த சில்வா*
*தலைவர்,*
*சிலாபம் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*சிலாபம்,*
*2018, செத்தெம்பர் 13.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) உப பிரிவினால் சிலாபம் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி உரிய சட்டத்தில் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள துணை விதியின் சட்ட திட்டங்களுக்கமைய உரிமப் பத்திரம் பெற்றுக் கொள்ளல் அல்லது அந்தச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு வரி செலுத்துவதற்கு தேவையற்ற ஏதாவதொரு வியாபாரம் சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 2019 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்கின்ற எல்லோரிடத்திலும் அவ்வியாபாரத்தினை இதற்கு முன் ஆண்டின் கிடைப்பனவை இங்கு கீழ் காணப்படும் அட்டவணை Iஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களினுள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ் அட்டவணையில் II ஆம் நிரலில் காணப்படுகின்ற அளவில் வியாபார வரி 2019 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். வரி செலுத்துகின்றவர்கள் எல்லோரும் இவ் வியாபார வரியினை 2019, ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| | I ஆம் நிரல்<br>வரி உரிய வருடத்துக்கு முன்னைய வியாபாரத்தினால் கிடைக்கப் பெற்ற வருமானம் | II ஆம் நிரல்<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | 6,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | இல்லை |
| 2. | 6,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 12,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 90.00 |
| 3. | 12,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 18,750 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 180.00 |
| 4. | 18,750 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 75,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 3600.00 |
| 5. | 75,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 150,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1200.00 |
| 6. | 150,000 ரூபாவுக்கு மேற்பட்ட போது | 3000.00 |

*11-358/6*

---

## சிலாபம் பிரதேச சபை

### ஏதேனும் கைத்தொழிலொன்றை நடாத்துவதற்கு ஏற்புடைய துணை விதியின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படுகின்ற உத்தரவுப்பத்திரம் மீது கட்டணம் விதித்தல்

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-VIII ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

அதன் படி ஏதாவதொரு துணை விதியின் கீழ் சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் ஏதாவதொரு கைத்தொழிலினை கொண்டு நடாத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் சிலாபம் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற எல்லா உரிமப் பத்திரங்களுக்காகவும் கட்டணம் அறவிடுவதாக மேலும் அறிவித்தல் விடுக்கின்றேன்.

டபிள்யூ. சரத் த சில்வா
தலைவர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2018, செத்தெம்பர் 13.

**தீர்மானம்**

*சிலாபம் பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிறைவேற்றப்பட்ட துணை விதியின் கீழ் சிலாபம் பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டினுள் வழங்கப்படுகின்ற உரிமப்பத்திரம் பற்றி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்*

*147ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 149 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கீழ் உரிய சட்டத்தினால் அமைக்கப்பட்ட துணை விதியில் விபரிக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள I, II, III, IV உப அட்டவணைகளில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு செயலுக்காகவும் சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் ஏதாவதொரு சுற்றாடலினை உபயோகிப்பதற்கு அதிகாரம் அளித்து 2018 ஆம் ஆண்டு வழங்கப்படுகின்ற ஏதாவதொரு உரிமப் பத்திரம் சம்பந்தாக அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் உள்ளவாறு அதிகாரப் பத்திரக் கட்டணம் விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும்,*

*இன்னும் உரிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழிலினை இலங்கைச் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அதனால் அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஹோட்டல் அல்லது உணவகம் அல்லது தரிப்பிடம் சென்ற ஆண்டில் கிடைக்கப்பெற்ற கொடுப்பனவுகளில் நூற்றிற்கு ஒன்று (1%) அளவில் உரிமப் பத்திரக் கட்டணம் விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு சிலாபம் பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

***அட்டவணை I***

| *நிரல் I*<br>*கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை* | *நிரல் II*<br>*இடத்தின் வருடாந்த பெறுமதி* | | |
|---|---|---|---|
| | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| **விருப்பமல்லாத வியாபாரங்கள்** | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 01. மின்னரம் சுத்தம் செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 02. பசளை அல்லது இரசாயனப் பசளை தயாரித்தல் அல்லது விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 03. தோல் பதனிடல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 04. தோல் விற்பதற்காக வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 05. மிருக வளர்ப்பு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக) | 500 0 | 750 0 | 1000 0 |
| 06. மாசித் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 07. இறப்பர் தயாரித்தல் அல்லது இறப்பர் ரொட்டி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 08. மிருக வைத்தியசாலையை கொண்டு நடாத்துதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 09. மொத்தமாக விற்பனைக்காக இலகுவில் பழுதடையக் கூடிய சிறுதீன் அல்லது உணவுப் பொருட்கள் வைத்துக் கொள்ளல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 10. கருவாடு, உப்பு மீன் அல்லது சாடின் 150 கிலோகிராமுக்கு மேலாக வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 11. மீன் அல்லது இறைச்சி ஜாடி இடல் அல்லது உலர்த்தல் அல்லது ஐஸ் இடல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 12. தேங்காய் சிரட்டை கரி அல்லது மரக் கரி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 13. புகையிலை உலர்த்துதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 14. மிருக உணவு தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 15. பிண்ணாக்கு தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 16. மிருக இறைச்சி அல்லது இரத்தம் சூடாக்கல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 17. சவர்க்காரம் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 18. மிருக எலும்பு அரைத்தல் அல்லது வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 19. டிரன்க் பெட்டி தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 20. புதிய உலோகங்கள் அல்லது பழைய உலோகங்களை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 21. உலோகக் கழிவுகளை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 22. வீட்டு உபகரணம் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 23. பிரம்புப் பொருட்களை தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 24. தளபாடத் தொழிற்சாலை ஒன்றினை நடாத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 25. சிறப் அல்லது பழக் குடிபானம் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 26. இனிப்புப் பண்டம் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 27. தென்னம் மட்டை ஊறவிடல் அல்லது பதனிடல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 27. தூரிகை வகைகளை தயாரித்தல் (பற்றூரிகை தவிர) | 500 0 | 750 0 | 1000 0 |
| 29. பற்தூரிகை தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 30. கள் ஒன்று சேர்த்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 31. வினாகிரி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 32. பலகை கிழித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 33. வர்ணப் பூச்சு, வார்னிஷ் அல்லது டிஸ்டெம்பர் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 34. சோடா உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 35. நார் சாயம் பண்ணல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 36. தோல் பொருள் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 37. பழங்கள், மீன் அல்லது பிற உணவு வகைகளை ரின்களில் அடைத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 38. கோப்பி, வேறு தானிய வகைகளை அரைத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 39. பேக்கிங் பவுடர் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 40. எரிவாயு மென்டல் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 41. பொடி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 42. மெழுகுவர்த்தி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 43. கற்பூரம் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 44. எழுதும் மை, அச்சு அல்லது ஸ்டென்சில் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 45. சலவை நீலம் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 46. சீல் மெழுகு தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 47. வாசனைத் திரவியங்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 48. பாடசாலை வெண்கட்டி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 49. டயர் அல்லது டியூப் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 50. டயர் மீள் நிரப்பல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 51. டயர், டியூப் வோல்கனயிசிங் பண்ணுதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 52. சீமெந்து உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 53. சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டஸ் சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 54. மணல் கடதாசி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 55. பிளாஸ்ரிக் பொருள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 56. செங்கல் சுடுதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 57. இயந்திரம் மூலம் துணி நெசவு செய்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 58. அமிலம் உற்பத்தி செய்தல் அல்லது அச்சுக்கல் மீள ஒழுங்கு படுத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 59. ஓடு உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 60. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்களை இட்டு சாக்குகளை சுத்தம் செய்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 61. இயந்திரம் உதவியுடன் சீமெந்து அச்சுக்கல் வெட்டல் | 500 0 | 750 0 | 1000 0 |

**அட்டவணை II**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபாவிற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| அபாயகரமான வியாபாரங்கள் | | | |
| 1. கருங்கல் அகழ்ந்தெடுத்தலும் உடைத்தலும் | 500 0 | 750 0 | 1000 0 |
| 2. மரக்கறி எண்ணெய் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 3. தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 4. தீப்பெட்டி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 5. மெதிலேடட் இஸ்பிரிட் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 6. தேயிலை பெட்டி உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 7. தும்பு அல்லது பிற நார் வகை உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 8. தும்பு அல்லது பிற நார் வகைகளிலிருந்து பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 9. வைக்கோல் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 10. பயன்படுத்திய ஆடைகளை களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 11. தங்க ஆபரண உற்பத்தி அல்லது பழுதுபார்த்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 12. இயந்திரம் மூலம் பலகை கிழித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 13. சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்பு அகழ்வு | 500 0 | 750 0 | 1000 0 |
| 14. இயந்திர உபகரண உதவியுடனான கொல்லன் கம்மலை நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 15. வெற்று சாக்கு அல்லது வெற்று போத்தல் வைத்துக் கொள்ளல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 16. சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 17. பயன்படுத்திய கடதாசி அல்லது பத்திரிகை வைத்துக் கொள்ளல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 18. விசிறி வர்ணந் தீட்டுதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 19. வானவெடிப் பொருட்கள் அல்லது பட்டாசு களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 20. உலோக பெருந்தொகையாக கைத்தொழில் ஆயுதங்கள் (இயந்திரம், ஆயுத உபகரண உற்பத்தி) | 500 0 | 750 0 | 1000 0 |

**அட்டவணை III**

| பிரியமற்றதும் மற்றும் அபாயகரமான வியாபாரங்கள் | | | |
|---|---|---|---|
| 01. மைக்கா சுத்தம் செய்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 02. இரசாயனப் பொருட்கள் உபயோகித்து இலவக்காய்பட்டை, கறுவா, ஏலக்காய் | 500 0 | 750 0 | 1000 0 |
| 03. ட்ரைகிளீன் செய்தல் அல்லது சாயம் போடுதல் அல்லது பதிக் செய்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 04. துணி அச்சிடல் அல்லது சாயம் இடல் அல்லது பதிக் பண்ணுதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 05. மின் உலோகங்களை மெருகூட்டல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 06. எண்ணெய் அல்லது மிருக கொழுப்பு உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 07. சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்பு சுடுதல் | | | |
| 08. வானவெடிப் பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |
| 09. மீன் எண்ணெய் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 10. வள்ளம் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 11. மின்கலம் மின்னேற்றல் அல்லது பழுதுபார்த்தல் | 500 0 | 750 0 | 1000 0 |

**அட்டவணை III**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 12. உலோக வகைகளை பொருத்துதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 13. மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 14. மோட்டார் வாகனங்கள் சேவை செய்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 15. இயந்திரம் மூலம் உலோகங்களை தூளாக்குதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 16. வார்ப்பக சாவடியினை பராமரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 17 புலொக் கல் வேலைத் தளத்தை கொண்டு நடாத்துதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 18. மோட்டார் வாகனங்களின் பொடியினை அமைத்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 19. கிருமிநாசினிகள், பீடை கொல்லிகள், களைகொல்லி தயாரித்தல் அல்லது மீள் நிரப்புதல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 20. கிருமி நாசினியை தயாரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 21. நுளம்புச் சுருள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1000 0 |

**அட்டவணை IV (வேறு நியமம் செய்யப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்ட)**

| | | | |
|---|---|---|---|
| 1. விடுதிகளை பராமரித்தல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 2. ஹோட்டல் | 500 0 | 750 0 | 1000 0 |
| 3. சோற்று கடை, சிற்றுண்டிச் சாலை மற்றும் தேநீர், கோப்பி விற்பனை | 500 0 | 750 0 | 1000 0 |
| 4. வெதுப்பகம் | 500 0 | 750 0 | 1000 0 |
| 5. பாற் பண்ணை மற்றும் பால் விற்பனை | 500 0 | 750 0 | 1000 0 |
| 6. உணவு விற்பனை | 500 0 | 750 0 | 1000 0 |
| 7. மீன் விற்பனை | 500 0 | 750 0 | 1000 0 |
| 8. இறைச்சி விற்பனை | 500 0 | 750 0 | 1000 0 |
| 9. ஐஸ் கைத்தொழில் நிலையம் | 500 0 | 750 0 | 1000 0 |
| 10. குளிர்பான கைத்தொழில் நிலையம் | 500 0 | 750 0 | 1000 0 |
| 11. சலவையகம் | 500 0 | 750 0 | 1000 0 |
| 12. திரிந்து விற்பனை செய்பவர்கள் | 500 0 | 750 0 | 1000 0 |
| 13. மாட்டுத் தொட்டி | 500 0 | 750 0 | 1000 0 |
| 14. சிகை அலங்கார நிலையம் மற்றும் பாபர் சாப்பு | 500 0 | 750 0 | 1000 0 |
| 15. மாடு வெட்டும் இடம் | 500 0 | 750 0 | 1000 0 |

*11-358/7*

---

**சிலாபம் பிரதேச சபை**

அபிவிருத்தி செய்யப்படாத காணி மீதான வரி - 2019

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-IX ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

2019 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட அவ் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரியினை இவ் ஆண்டில் ஏப்பிறல் மாம் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்றும் மேலும் அறிவில்த்தல் விடுக்கின்றேன்.

டபிள்யூ. சரத் த சில்வா
தலைவர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2018, செத்தெம்பர் 13.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின்படி சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கட்டிடங்களை கட்டமைப்பதற்கு அல்லது நிரந்தரமில்லாத போதும் எப்போதும் விவசாயம் செய்வதற்கு உகந்த ஏதாவதொரு காணியில்–

(அ) கட்டிடம் கட்டாத போது ; அல்லது
(ஆ) அந்தக் காணி முறையாக அல்லது சட்டரீதியாக விவசாயம் செய்வதற்கு உபயோகிக்கப்பட்ட போது ; அல்லது
(இ) அந்தக் காணியில் கட்டமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு உண்மையாகவே உள்ளாக்கப்பட்டுள்ள நிலப் பரப்பு மற்றும் அந்தக் காணியின் மொத்த பரப்பளவுக்கிடையில் உள்ள வீதம் 1 :4 (ஒன்றுக்கு : நான்கு) இற்குக் குறைந்த அளவாயின்,

உரிய காணி அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருத்திற் கொண்டும் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதுகின்ற காணியின் மீது 2019 ஆம் ஆண்டிற்காக அந்த ஒவ்வொரு காணியில், நிலப்பரப்பின் மூலதனப் பெறுமதியில் நூற்றுக்கு 0.5 (0.5%) வருட வரியாக 2018 ஆம் ஆண்டிற்காக விதிப்பதற்கும் உரிய அபிவிருத்தி செய்யப்படாத காணி மீது வரி 2019 ஆம் ஆண்டில் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் சிலாபம் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென்று நான் தீர்மானிக்கின்றேன்.

11-358/8

---

**சிலாபம் பிரதேச சபை**

குப்பைகளை அகற்றுவதற்கான கட்டணம் - 2019

சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-X ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யூ. சரத் த சில்வா
தலைவர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2018, செத்தெம்பர் 13.

**தீர்மானம்**

2017.12.05 ஆந் திகதிய தீர்மான இல. 9174 இற்கான தீர்மானத்தின்படி சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குப்பைகளை கொண்டு செல்வதற்கு காணப்படும் தூரத்தினை கவனத்தில் கொண்டு முதலாவது 05 கிலோ மீற்றரினுள் டிரக்டர் ஒரு லோடினை கொண்டு செல்வதற்காக 1200.00 ரூபா கட்டணம் அதிகரிக்கும் எல்லா கிலோ மீற்றர் 01 க்காகவும் 75.00 ரூபா படி ஒன்று சேர்த்து 2019 ஆம் ஆண்டிற்காக அறவிடுவதற்கு சிலாபம் பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

11-358/9

**சிலாபம் பிரதேச சபை**

*சுற்றாடல் உரிமைப் பத்திரக் கட்டணம் விதித்தல் -2019*

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-XI ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*டபிள்யூ. சரத் த சில்வா*
*தலைவர்,*
*சிலாபம் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*சிலாபம்,*
*2018, செத்தெம்பர் 13.*

**தீர்மானம்**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் படி 2019ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளும் சுற்றாடல், உரிமப் பத்திரத்திற்காக கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணம் விதிக்கப்பட வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.*

| | | |
|---|---|---|
| 1. | சூழல் பாதுகாப்பு உரிமப் பத்திரத்திற்காக விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 500.00 |
| 2. | சூழல் உரிமப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவக் கட்டணம் | ரூ. 50.00 |
| 3. | சூழல் உரிமப் பத்திரக் கட்டணம் | ரூ. 1250.00 |
| 4. | பரிசீலனைக் கட்டணம் | |

| ஆரம்ப முதலீடு | பரிசீலனைக் கட்டணம் ரூபா சதம் |
|---|---|
| ரூபா 100,000 வரை | 250.00 |
| ரூபா 1,00,001 - 2,00,000 | 500.00 |
| ரூபா 2,00,001 - 5,00,000 | 1,250.00 |
| ரூபா 5,00,001 - 10,00,000 | 2,500.00 |
| 10,00,000 மேற்பட்ட | 5,000.00 |

*11-358/10*

---

**சிலாபம் பிரதேச சபை**

*சேவைக் கட்டணம் அறவிடல் -2019*

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-XII ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*டபிள்யூ. சரத் த சில்வா*
*தலைவர்,*
*சிலாபம் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*சிலாபம்,*
*2018, செத்தெம்பர் 13.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்திற்கமைய 2019 ஆம் ஆண்டிற்காக கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு சேவைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | (i) வாசிகசாலை உறுப்புரிமைக் கட்டணம் | |
| | • வயது வந்தோருக்கு | 50.00 |
| | • 12 வயதிற்கு கீழ் | 25.00 |
| | (ii) வாசிகசாலை உறுப்புரிமைக் கட்டணம் | |
| | • வயது வந்தோருக்கு | 30.00 |
| | • 12 வயதிற்கு கீழ் | 15.00 |
| | (iii) புத்தகங்களை மீள் அளிக்கும் காலதாமத கட்டணம் | |
| | • 01 நாள் தொடக்கம் 30 நாள் வரை ஒரு புத்தகத்திற்காக ஒரு தினத்திற்கு | 1.00 |
| | • 31 நாள் தொடக்கம் 90 நாள் வரை ஒரு புத்தகத்திற்காக ஒரு தினத்திற்கு | 40.00 |
| | • 91 நாள் தொடக்கம் 180 நாள் வரை ஒரு புத்தகத்திற்காக ஒரு தினத்திற்கு | 80.00 |
| | • 180 நாட்களுக்கு மேற்படுகின்ற ஒரு புத்தகத்திற்காக ஒரு தினத்திற்கு | 100.00 |
| 2. | (i) நிழற்படப் பிரதிகளுக்காக | |
| | • A4 ஒரு பக்கம் | 5.00 |
| | • A4 இரு பக்கம் | 8.00 |
| | • Legal ஒரு பக்கம் | 7.00 |
| | • Legal இரு பக்கம் | 10.00 |
| | • A3 ஒரு பக்கம் | 10.00 |
| | • A3 இரு பக்கம் | 12.00 |
| | (ii) அச்சுப் பிரதிக்காக | |
| | • A4 ஒரு பக்கம் (வெள்ளை கறுப்பு) | 30.00 |
| | • A4 ஒரு பக்கம் (வர்ணம்) | 50.00 |
| 3. | குழாய் நீர் பதிவு செய்வதற்கான கட்டணம் | 200.00 |
| 4. | வீதிக் கோடு மற்றும் மீள் பெற்றுக் கொள்ளாதது பற்றிய கட்டணம் | |
| | • சான்றிதழ் வழங்குவதற்கான கட்டணம் | 600.00 |
| | • வைப்புத் தொகை | 100.00 |
| 5. | மதிப்பீட்டு ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்யும் பத்திரக் கட்டணம் | 100.00 |
| 6. | சேதனப் பசளை விற்பனை செய்தல் | |
| | • 1 கிலோவின் விலை | 12.00 |
| | • 100 கிலோ ஒரே தடவையில் பெற்றுக் கொள்ளும் போது 1 கிலோவின் விலை (மொத்த விலை) | 10.00 |
| | • தள்ளுபடி செய்யப்படாத பசளை விற்பனைக்காக ஆகக் கூடியது 1 தொன் மற்றும் 1 தொன்னிற்கு மேற்பட்ட விற்பனைக்காக 1 கிலோவின் விலை | 4.50 |
| 7. | கட்டாக்களி மாடுகளை பிடித்தல் மற்றும் பாதுகாப்பதற்காக கட்டணம் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு ஆகும் | |
| | • ஒரு மாட்டிற்காக அபராத தொகை | 2500.00 |
| | • ஒரு மாட்டினை பிடிப்பதற்கான கட்டணம் | 2500.00 |
| | • ஒரு மாட்டினை கொண்டு செல்வதற்கான கட்டணம் | 1000.00 |
| | (இதற்கு மேலதிகமாக ஒரு மாட்டினை தடுத்து வைத்துக் கொள்வதற்கான ஒரு தினத்திற்கு ரூ. 500.00 படி அறவிடப்படும்) | |
| 8. | 5000 லீற்றருடைய நீர் தாங்கியிற்கு | 1750.00 |

9. பிரதேச சபைக்குரிய ஹட் சுய நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொடுக்கும் போது அறவிடப்படும் கட்டணம்

| | |
|---|---|
| ● ஒரே தடவையில் 5 ஹட்கள் அல்லது அதற்கு மேற்பட்டவைகளை வழங்கும் போது ஒன்றிற்காக | 650.00 |
| ● ஒரே தடவையில் 5 ஹட்கள் அல்லது அதற்கு குறைவாக வழங்கும் போது ஒன்றிற்காக | 750.00 |
| மேற்படும் எல்லா தினங்களுக்காகவும் | 300.00 |

10. பிணத்தினை எரிப்பதற்காக கட்டணம்

| | |
|---|---|
| ● பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குடியிருக்கும் வயோதிபர் ஒருவரின் சடலத்தினை தகனம் செய்தல் | 7500.00 |
| ● பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குடியிருக்கும் வயோதிபம் அற்ற சடலத்தினை தகனம் செய்தல் | 7000.00 |
| ● பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்கு வெளியில் குடியிருக்கும் வயோதிபர் ஒருவரின் சடலத்தினை தகனம் செய்தல் | 8500.00 |
| ● பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்கு வெளியில் குடியிருக்கும் வயோதிபர் அற்ற ஒருவரின் சடலத்தினை தகனம் செய்தல் | 8,800.00 |
| ● பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் குடியிருக்கும் பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த வருமானமுள்ள குடும்ப வயோதிபர் ஒருவரின் சடலத்தினை தகனம் செய்தல் | 6,500.00 |
| ● பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்கு வெளியில் பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த வருமானமுள்ள குடும்ப வயோதிபம் அற்ற ஒருவரின் சடலத்தினை தகனம் செய்தல் | 6,000.00 |

11. (i) நீர் வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கள் சபையினால் புதிய நீர் வழங்களின் போது சிலாபம்/மாதம்பை நீர் வடிகாலமைப்புத் திட்டத்தின் நிலையப் பொறுப்புடைய உத்தியோகத்தர்களின் கோரிக்கைப்படி, சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவில் மணல்/கெரவல்/தார்/கொன்கிறீட்/கொன்கிறீட் கட்டி/பிரிமிக்ஸ் தெருக்கள் அல்லது தெருக்களில் மேற்பகுதியினை புண்படுத்தல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபாரிசு அப் பகுதியினை பழுது பார்ப்பதற்கான கட்டணம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நுகர்வோரிடத்தில் இருந்து அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

| பாதை/பாதையின் மேற்பகுதி | ஒரு சதுர அடியிற்கு ரூபா சதம் | ஒரு சதுர மீற்றருக்கு ரூபா சதம் |
|---|---|---|
| மணல் /கெரவல் | 25.00 | 270.00 |
| தார் | 145.00 | 1560.00 |
| கொன்கிறீட் | 200.00 | 2152.00 |
| கொன்கிறீட்கட்டி | 215.00 | 2313.00 |
| பிரமிக்ஸ் | 100.00 | 1076.00 |

(ii) நீர் வழங்கல் திட்டங்களினை நீடிக்கும் போது, தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசிற்கு அமைய அத் திட்டத்தின் தெரு புண்படுத்துவதனால் பழுது பார்ப்புக் கட்டணமாக ரூ. 5,000 அல்லது அதற்கு மேற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் ரூ. 500.00 கட்டணம் பாதுகாப்பு வைப்பாக பாதைகளை புண்படுத்துகின்ற நீர் வழங்கல் திட்டத்தினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றவர்களிடத்தில் பெற்றுக் கொண்டு அவர்களினால் பாதைகளை புண்படுத்தப்பட்டதனை புனரமைத்து முன்பிருந்த நிலைக்கு உட்படுத்துவதாக உடன்படிக்கைக்கு வந்ததன் பின்பு, அதற்காக அனுமதி அளித்தல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரிசீலித்ததன் பின்பு பாதை புண்படுத்தப்பட்டதனை முன்னிருந்த நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படுமாயின், உரிய நபர்களுக்கு பாதுகாப்பு வைப்புத் தொகை மீள் அளிக்கப்படும்.

11-358/11

**சிலாபம் பிரதேச சபை**

சொத்துக்களை வாடகைக்கு வழங்குதல் - 2019

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-XIII ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

டபிள்யூ. சரத் த சில்வா
தலைவர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2018, செத்தெம்பர் 13.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி சிலாபம் பிரதேச சபைக்கு உரித்துடைய சொத்துக்களை 2019 ஆம் ஆண்டிற்கு வாடகைக்கு வழங்குவதற்கு கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணம் விதிப்பதற்கு நான் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | பாட்டுக் கச்சேரிக்காக மைதானத்தினை கூலிக்கு வழங்குதல் (ஒரு தினத்திற்கு) | 2000.00 |
| 2. | வேறு நடவடிக்கைக்காக மைதானத்தினை கூலிக்கு வழங்குதல் (ஒரு தினத்திற்கு) | 1000.00 |
| 3. | இதற்கு மேலதிகமாக பண்டாரநாயக்கபுர பிரதேச சபை விளையாட்டு மைதானத்தினை பெற்றுக் கொள்ளும் போது - | |
| | மின்சாரத்தினை பெற்றுக் கொள்வதாயின் (ஒரு தினத்திற்கு) | 1000.00 |
| | நீர் பெற்றுக் கொள்வதாயின் (ஒரு தினத்திற்கு) | 500.00 |
| | அதி சக்தி வாய்ந்த மின் விளக்கு உபயோகிப்பதாயின் (ஒரு மின் விளக்கிற்காக ஒரு தினத்திற்கு) | 200.00 |
| 4. | பிரதேச சபை பொது காணிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொடுத்தல் (ஒரு தினத்திற்கு) | 2000.00 |
| 5. | மோட்டார் கிரேட்டரினை வாடகைக்கு வழங்கல் மீற்றர் ஒரு மணித்தியாலத்திற்காக | ரூ. 3100.00 + எரிபொருள் கட்டணம் |

* 01 மீற்றர் மணித்தியாலத்திற்கு 12 லீற்றர் எரிபொருளுக்காக தற்போது காணப்படும் விலைப்படி கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

* ஒரு நாளைக்கு 05 மீற்றர் மணித்தியாலத்திற்கு குறைவாக வாடகைக்கு வழங்கப்படமாட்டாது.

* ஒரு நபர் அல்லது நிறுவனத்திற்காக ஒரு மாதத்திற்கு (சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினம் தவிர்ந்து) 100 மீற்றர் மணித்தியாலத்திற்கு குறைவாக வாடகைக்கு வழங்கப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| 6. | டிரக்டர் மூலம் விசுறுகின்ற இயந்திரத்தினை வாடகைக்கு வழங்குதல் மீற்றர் ஒரு மணித்தியாலத்திற்காக | ரூ. 500.00 + எரிபொருள் கட்டணம் |

* 01 மீற்றர் மணித்தியாலத்திற்கு 3 லீற்றர் எரிபொருளுக்காக தற்போது காணப்படும் விலைப்படி கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

* ஒரு நாளைக்காக 03 மீற்றர் மணித்தியாலத்திற்கு குறைவாக வாடகைக்கு வழங்கப்படமாட்டாது

11-358/12

## சிலாபம் பிரதேச சபை

*கட்டிடங்கள் கட்டமைப்பதற்காக கட்டணம் அறவிடல் - 2019*

*சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-XIV ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*டபிள்யூ. சரத் த சில்வா*
*தலைவர்,*
*சிலாபம் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*சிலாபம்,*
*2018, செத்தெம்பர் 13.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டியன மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரதேச சபையிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி சிலாபம் பிரதேச சபை எல்லையினுள் வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தும் பிரதேசங்களில் கட்டிட விண்ணப்பப்படிவம் மற்றும் கட்டிட இணக்கச் சான்றிதழுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2019 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு சிலாபம் பிரதேச சபை கருத்து தெரிவிக்கின்றது.*

(1) *கட்டிட வரைபுத் திட்டத்தினை அனுமதித்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவக் கட்டணம் 200.00 ரூபா*

(2) *விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் போது முன்திட்டக் கட்டணம் (எல்லா மாடிகளது நில மட்ட அளவும் ஒன்று சேர்க்கப்பட்டு)*

### அட்டவணை

| (i) வீட்டு நில அளவு | குடியிருப்பிற்காக 2019 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படும் தொகை | வர்த்தகம் அல்லது வேறு 2019 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படும் தொகை |
|---|---|---|
| 1. ச.அ. 500 இற்கு குறைந்த | 300.00 | 350.00 |
| 2. ச.அ. 501 தொடக்கம் 1000 வரை | 400.00 | 850.00 |
| 3. ச.அ. 1001 தொடக்கம் 1500 வரை | 500.00 | 1500.00 |
| 4. ச.அ. 1501 தொடக்கம் 2000 வரை | 600.00 | 2500.00 |
| 5. ச.அ. 2001 தொடக்கம் 2500 வரை | 700.00 | 4500.00 |
| 6. ச.அ. 2501 தொடக்கம் 3000 வரை | 750.00 | 6500.00 |
| 7. ச.அ. 3001 தொடக்கம் 3500 வரை | 800.00 | 7500.00 |
| 8. ச.அ. 3501 தொடக்கம் 4000 வரை | 900.00 | 8500.00 |
| 9. ச.அ. 4000 இற்கு மேற்பட்ட | சதுர அடி 500 ஆகும் போது மேலதிக நில அளவிற்காக 800.00 படி | சதுர அடி 500 ஆகும் போது மேலதிக நில அளவிற்காக 1200.00 படி |

* *மதில் நீளம் 1 இக்கான கட்டணம் 10.00 ரூபா*

(ii) *சட்டரீதியாக செயற்படுத்த இயன்ற சட்டரீதியற்ற கட்டமைப்பிற்காக பின் அனுமதிக்கான கட்டணம்*

| | | கீழ் தளம் ச. மீ. 1 இற்கான கட்டணம் 2018 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படும் தொகை ரூபா சதம் | மேல் தளம் ச. மீ. 1 இற்கான கட்டணம் 2018 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படும் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|
| (i) | அத்திவாரம் II கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள (முதல் பகுதி) | 30.00 | 30.00 |
| (ii) | கூரையின் மட்டம் வரை கட்டமைத்துள்ள போது (கூரை இன்றி) | 50.00 | 50.00 |
| (iii) | கூரையினை அமைத்து முடிவடைந்த போது | 70.00 | 70.00 |
| (iv) | வேலை முடிவடைந்த போது | 100.00 | 100.00 |
| (v) | மதில் ஒன்றினை கட்டமைப்பதற்காக நீளம் 1 மீற்றருக்காக | 20.00 | - |

2. கட்டிட இணக்கச் சான்றிதழுக்கான கட்டணம் 750.00 ரூபா.

11-358/13

---

**சிலாபம் பிரதேச சபை**

வாகனம் நிறுத்தி வைப்பதற்காக கட்டணம் அறவிடல் - 2019

சிலாபம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது முறையாக முன்பே குறிப்பிடப்பட்ட 8-XV ஆம் ஆலோசனை இலக்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யூ. சரத் த சில்வா
தலைவர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2018, செத்தெம்பர் 13.

**தீர்மானம்**

வடமேல் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய கௌரவ அமைச்சரினால் அமைக்கப்பட்ட 2010.07.16 ஆந் திகதிய 1663 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட 2011.01.18 ஆந் திகதிய வடமேல் மாகாண சபையின் நிரந்தரம் செய்யப்பட்ட 2011.04.08 ஆந் திகதிய 1703/18 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் அறிவித்தல் விடுக்கப்பட்ட 2011.10.31 ஆந் திகதி சிலாபம் பிரதேச சபையின் பொது கூட்டத்தில் ஏற்றுக் கொண்டு 2012.04.20 ஆந் திகதிய 1755 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டு தமதாக்கிக் கொண்ட அத் துணை விதிக்கு அமைய கீழ் காணப்படும் அட்டவணையில் உள்ளவாறு அதிகாரப் பிரிவில் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக 2019 ஆம் ஆண்டிற்காக வரி செலுத்தப்பட வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

**பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வாகனம் நிறுத்தி வைத்தல்**

| | ரூ. ச. |
|---|---|
| 1. அனுமதிக்கப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்தலும் இடத்தினை புதிதாக முச்சக்கர வண்டி உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளும் போதும் மீள் பெற்றுக் கொள்ளும் போதும் | 1500.00 |
| 2. முச்சக்கர வண்டிக்காக வருடத்திற்க உரிமப் பத்திரக் கட்டணம் | 500.00 |
| 3. பேருந்துக்காக (ஒரு நாளைக்கு) | 70.00 |

**வாரச் சந்தை வாகனம் நிறுத்தி வைக்குமிடத்தில் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக**

| | ரூ. ச. |
|---|---|
| 1. மிதிவண்டிக்காக | 10.00 |
| 2. மோட்டார் வண்டி/முச்சக்கர வண்டிக்காக | 20.00 |
| 3. வேன்/லொரிக்காக | 30.00 |

*11-358/14*

---

**கொட்டபொல பிரதேச சபை**

*வரிமதிப்பு வரி அறவிடல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154 ஆம் சரத்தின் (1) உட்பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட் பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து நிரந்தரச் வதிவுச் சொத்துக்களிலுருந்தும் 2018 ஆம் வருடத்தில் வலுவடைந்த வருடாந்த பெறுமதியை 2019 ஆம் வருடத்தின் வருடாந்த பெறுமதியாக ஏற்றுக்கொண்டு அப் பெறுமதியின் நூற்றுக்கு 6 % விகிதத்தினை வரிமதிப்பு வரியாக 2019 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவென கொட்டபொல பிரதேச சபை கருத்துத் தெரிவித்துள்ளது.*

*தயாநன்த அபேவிக்ரம,*
*தலைவர்,*
*கொட்டபொல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கொட்டபொல, தெனியாய,*
*2018, ஓகத்து 21.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின்*

*(அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொட்டபொல பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து நிரந்தரச் வதிவுச் சொத்துக்களிலிருந்தும் 2018 ஆம் வருடத்திற்கு அறவிடப்பட்ட வரிப் பெறுமதியை 2019 ஆம் வருடத்திற்கும் விதித்து அறவிடப்பட சபை ஏற்றுக்கொண்டுள்ளது.*

*(ஆ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வருடாந்த வரியை ஒழுங்கு முறைப்படி 2019 மாச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களிலோ அல்லது அதற்கு*

முன்னரோ சமமான நான்கு தவணைகளாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் வருடத்தின் ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது தீர்மான இலக்கம் 5:5:1 இன் கீழ் மேற்குறித்த பிரேரணைகளை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

11-418/1

---

**கொட்டபொல பிரதேச சபை**

ஏக்கர் வரி அறவிடல் - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (3) ஆம் பிரிவின் உட்பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளஅதிகாரத்தின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஒவ்வொரு காணிக்கும் ஹெக்டயார் அளவின்படி வரியொன்றினை 2019 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவென கொட்டபொல பிரதேச சபை கருத்துத் தெரிவித்துள்ளது.

தயாநன்த அபேவிக்ரம,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல, தெனியாய,
2018, ஓகத்து 21.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின்

(அ) 134 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் படி வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அதன் உப பிரிவின் முதலாம் சரத்தின் கீழ் 1989.03.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட நியதியின் படி ஏக்கர் வரியை விதித்தல் அறவிடல் தொடர்பான செயற்பாடானது உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் விஷேட பிரதேசங்களாக விளம்பரப் படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஹெக்டயார் 1 க்கு குறையாததும் எனினும் ஹெக்டயார் 5 க்கு குறைந்த அனைத்து காணிகளுக்கும் ரூபா ஐம்பது (50.00) விகிதாசாரப்படி ஏக்கர் வரியை மற்றும் ஹெக்டயார் 5 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து நிரந்தர வதிவுச் சொத்துக்களிலிருந்தும் அனைத்து ஹெக்டயார்களுக்கும் ரூபா பத்து (10) ஆக ஏக்கர் வரியை 2019 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உரிய வரியை முறைப்படி 2019 மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களிலோ அல்லது அதற்கு முன்னரோ சமமான நான்கு தவணைகளாக பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது தீர்மான இலக்கம் 5:5:2 இன் கீழ் மேற்குறித்த பிரேரணைகளை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

11-418/2

---

**கொட்டபொல பிரதேச சபை**

வியாபார வரி விதித்தல் - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் படி பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி குறித்த சட்டத்தின் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட துணை விதிக்கேற்ப அதன் கீழ் உத்தரவுப்

*பத்திரமொன்றை அல்லது அப்பிரிவின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு கைத்தொழில் வரியை செலுத்த தேவையற்ற ஏதாவது வியாபாரம் தொடர்பாக கொட்டபொல பிரதேச சபை வலுப் பிரதேசத்தினுள் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு வரும் அனைத்து நபரினாலும் குறித்த வியாபாரத்தின் முன்னைய வருட வருமானத்தை இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணை Iஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் தொடர்பாக அவ் அட்டவணையில் II ஆம் நிரலின் படி ஒவ்வொரு வியாபாரத்துக்குமான வரியை 2019ஆம் ஆண்டிற்கென விதித்து அறவிடப்பட வரிக்குட்பட்ட அனைத்து நபரும் குறித்த வியாபார வரியை 2019 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கொட்டபொல பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டுமென கொட்டபொல பிரதேச சபை கருத்துத் தெரிவித்துள்ளது.*

தயாநன்த அபேவிக்ரம,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல, தெனியாய,
2018, ஓகத்து 21.*

**தீர்மானம்**

*கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் வருடத்தின் ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:5:3 இன் கீழ் மேற்குறித்த கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*2019 ஆம் வருடத்திற்காக விதிக்கப்பட்ட குறித்த வியாபார வரி உரிய வருடத்தின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கொட்டபொல பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென மீண்டும் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல்<br>வரி ஏற்புடைய வருடத்துக்கு முன்னைய வருட வியாபாரத்தினால் கிடைக்கப் பெற்ற வருமானம் | II ஆம் நிரல்<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூ. ச. |
|---|---|
| 1. 6,000 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | இல்லை |
| 2. 6,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 12,000 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | 90.00 |
| 3. 12,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 18,750 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | 180.00 |
| 4. 18,750 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 75,000 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | 360.00 |
| 5. 75,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் 150,000 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | 1200.00 |
| 6. 150,000 ரூபாவுக்கு மேற்பட்ட போது | 3000.00 |

*11- 418/3*

---

**கொட்டபொல பிரதேச சபை**

*உத்தரவுப்பத்திரக் கட்டணம் -2019*

*கொட்டபொல பிரதேச சபையினால் எற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி ஒன்றின் கீழ் கொட்டபொல பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 140 ஆம் பிரிவில் சேர்த்து வாசிக்கப்படும் மேற்குறித்த சட்டத்தின் 149 ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் கீழே அட்டவணையில் (1) ஆம் நிரலில் குறித்த ஒவ்வொரு கைத்தொழில்கள் தொடர்பாகவும் அதே அட்டவணையில் இரண்டாம் நிரலுக்கு நேரொத்த நிரலில் குறித்த தொகையை உத்தரவுப் பத்திரக் கட்டணமாக விதித்து அறவிடப்பட வெனவும் அதன் அட்டவணையில் குறித்த கைத்தொழில்கள் 1968ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாச அபிவிருத்தி சட்டத்தின்படி இலங்கை உல்லாச பிரயாணத்துறையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அச்சபையினால் அனுமதிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்*

கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் கீழே இரண்டாம் பகுதியில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும் ஹோட்டல்கள், தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்கள் தங்குமிட வசதிகள் அற்ற சிற்றுண்டி நிலையங்கள் தொடர்பாக தலைவர் அவர்களினால் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தின் படி செலுத்த வேண்டிய கட்டணத்தை குறித்த ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல் போன்றவற்றின் வரிமதிப்புக் கட்டணத்தைத் தவிர வியாபாரத்தின் 2018 ஆம் வருட வருமானங்களின் நூற்றுக்கு 1 % வீதத்திற்கு சமமான தொகையை உத்தரவுப் பத்திர கட்டணமாக விதித்து அறவிட கொட்டபொல பிரதேச சபையினால் கருத்துத் தெரிவித்துள்ளது.

தயாநந்த அபேவிக்ரம,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல, தெனியாய,
2018, ஓகத்து 21

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. பேக்கரி நிலையமொன்றை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. சாப்பாட்டுக் கடையொன்று அல்லது போசணசாலை ஒன்றை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. தேனீர் அல்லது கோப்பிக் கடையொன்று வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. விடுதியொன்று நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. முடிவெட்டும் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. இறைச்சி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. மீன் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| **ஆபத்தான அருவருக்கத்தக்கவியாபாரங்கள்** | | | |
| 01. புலொக் கல் கொங்கிரீட் வேலைத்தளம் நடத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. கல் ஆலை/கற்குழி நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. ஆலையொன்று நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. வேல்டின் உருக்கு வேலைத் தளம் நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. காஸ் விநியோக நிலையம் நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. மர ஆலை நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. தீக் களியாட்ட பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| **அருவருக்கத்தக்க ஆபத்தான வியாபாரங்கள்** | | | |
| 1. மரணச் சடங்கு நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. இறப்பர் ஒன்று சேர்க்கும் நிலையம் நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. விவசாய இரசாயன பொருட்கள் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

## கொட்டபொல பிரதேச சபை

*உத்தரவுப் பத்திரக் கட்டணம் அறவிடல் - 2019*

*கொட்டபொல பிரதேச சபை வலுப் பிரதேசத்தினுள் ஏதாவது கைத்தொழில் நடத்துவதற்கு உரிய துணைவிதியின் கீழ் 2019 ஆம் ஆண்டு தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரக் கட்டணம் அறவிடல்.*

*கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:5:4 இன் கீழ் மேற்குறித்த கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*அதன் படி ஏதாவது துணைவிதியின் கீழ் கொட்டபொல பிரதேச சபை வலுப் பிரதேசத்திற்குள் ஏதாவது கைத்தொழிலினை நடத்துவதற்காக 2019 ஆம் ஆண்டு தொடர்பாக கொட்டபொல பிரதேச சபையினால் வழங்கப்பட்ட அனைத்து உத்தரவுப் பத்திரம் மீதும் கட்டணமொன்று அறவிடப்படுவதாக மீண்டும் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*தயாநன்த அபேவிக்ரம,*
*தலைவர்,*
*கொட்டபொல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கொட்டபொல , தெனியாய,*
*2018, ஓகத்து 21.*

*11- 418/4*

---

## கொட்டபொல பிரதேச சபை

*கைத்தொழில்களுக்கான வரி விதித்தல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டுவரும் கீழே அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கைத்தொழில்கள் தொடர்பாக அட்டவணையின் நிரல் II இற்கு நேரொத்த நிரலில் குறித்த தொகையை கைத்தொழில் வரியாக 2019 ஆம் வருடத்திற்கு விதிக்கப்பட்டு அறவிடப்படவும், இக் கைத்தொழில் வரிக்கு உட்பட்ட நபரினால் 2019 ஆம் வருடத்தின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் கொட்டபொல பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென கொட்டபொல பிரதேச சபை தீர்மானித்துள்ளது.*

*தயாநன்த அபேவிக்ரம,*
*தலைவர்,*
*கொட்டபொல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கொட்டபொல, தெனியாய,*
*2018, ஓகத்து 21.*

### *தீர்மானம்*

*கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:5:5 இன் கீழ் மேற்குறித்த கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன். 2019 ஆம் வருடத்திற்காக விதிக்கப்பட்ட குறித்த கைத்தொழில் வரி உரிய வருடத்தின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கொட்டபொல பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென மீண்டும் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

**அட்டவணை இல. 01**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் பிரகாரம் விதிக்கப்படும் கைத்தொழில்களுக்கான வரி*

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. ஆடை தைக்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. மிதிவண்டி பழுது பார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. அரிசி குத்தும் ஆலை ஒன்று வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டி பழுது பார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. டயர் டியூப் பழுதுபார்க்கும் நிலையம் கொண்டு நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. மின்சார இயந்திரங்கள் பழுதுபார்க்கும் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. தேங்காய் எண்ணெய் ஆலை | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. தொலைபேசி, ரூபவாஹினி இயந்திரம் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09. இரும்பு உருக்கு நிலையமொன்று வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. டிஜிடல் தொழில்நுட்ப அச்சகம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. தச்சு வேலைத்தளமொன்று நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. குசன் வேலைத்தளமொன்று நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. கடிகாரங்கள் பழுதுபார்க்கும் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. பீரலு, பூவெட்டும் நிலையமொன்று வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. விளக்குமாறு, பாபிஸி,தும்பு உற்பத்திப் பொருள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. சுண்ணாம்புச் சூலை நடாத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. கொப்பரா உற்பத்தி நிலையம் நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. இறப்பர் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. அச்சகம் ஒன்று நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. குளிர்அறைகள், குளிரூட்டிகள் பழுதுபர்க்கும் நிலையமொன்று நடாத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

11-418/5

---

**கொட்டபொல பிரதேச சபை**

*காணி விற்பனை நிலையத்தில் வரி அறவிடுதல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கொட்டபொல பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவது காணி ஏல விற்பனையாளர்கள் மூலமோ அல்லது தரகர் மூலமோ அல்லது அவருடைய உதவியாளர் அல்லாவிடின் துணை முகவர் மூலம் அல்லது பிரசித்த ஏல விற்பனையில் அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் விற்கப்படுமாயின் அந்த விற்பனையில் கிடைக்கப்படும் பணத்தில் நூற்றுக்கு 1 % வீதத்திற்கு சமனான வரியை காணி விற்பனையாளரால் அல்லது ஏல விற்பனையாளரால் அல்லது தரகர் அல்லது துணை முகவர் போன்றவர்களால் விற்பனைப் பெறுமதியில் கிடைத்த பணத்தால் கொட்டபொல பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என அறிவித்தல் விடுக்கப்படுவதோடு*

கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் வருடத்தின் ஒகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:5:6 இன் கீழ் மேற்குறித்த கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

தயாநன்த அபேவிக்ரம,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல, தெனியாய,
2018, ஒகத்து 21.

11- 418/6

---

**கொட்டபொல பிரதேச சபை**

விளம்பரங்களுக்கான அறிவித்தல் /கட்புலனாகும் சூழல் வரி அறவிடல் - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 221 (ஆ) மற்றும் 122 - 126 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை அதிவிஷேட வர்த்தமானியில் IV (அ) பிரிவில் கௌரவ முதலமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்ட 2008.11.30 ஆந் திகதிய 1532 ஆம் இலக்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்திய கொட்டபொல பிரதேச சபையினால் ஏற்றுக் கொண்ட இடை யாப்பு 39 ஆம் பிரிவின் பிரகாரம் கொட்டப்பொல பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களுக்காக காட்சிப்படுத்தப்படும் (பெனர் உட்பட) அமைப்புகள் மற்றும் அறிவித்தல்களுக்காக கீழ்க்காணும் அட்டவணையில் குறித்திருக்கும் கட்டணங்களை 2019.01.01 ஆந் திகதி தொடக்கம் விதித்து அறவிடப்படும் என பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் வருடத்தின் ஒகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:5:7 இன் கீழ் மேற்குறித்த கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

தயாநன்த அபேவிக்ரம,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல, தெனியாய,
2018, ஒகத்து 21.

**அட்டவணை**

**விளம்பர விபரங்கள்**

01. ஏதாவது தனியார் கட்டடமொன்றின் சுவரில் மதிலொன்றில் விளம்பரப்படுத்துவதற்கு ஒரு வருடத்திற்கு
(ஒரு சதுர அடிக்கு ரூபா 30) பெனர் கடவுட் தொடர்பாக (ஒரு சதுர அடிக்கு ரூபா 20)

02. பிரதான வீதிக்கு தென்படும் விதத்தில் சுற்றாடலில் உள்ள நிலத்தை பாவனை செய்து பிரதான வீதிக்கு அருகே பொருத்தப்பட்ட அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட விளம்பரம் ஒன்றிற்காக ஒரு வருடத்திற்கு
(ஒரு சதுர அடிக்கு ரூபா 40) பெனர் கடவுட் தொடர்பாக (ஒரு சதுர அடிக்கு ரூபா 20)

03. உள்ளூராட்சி நிறுவனத்தின் சூழலை பயன்படுத்தி அமைக்கப்படும் விளம்பரம் ஒன்றிற்காக ஒரு வருடத்திற்கு
(ஒரு சதுர அடிக்கு ரூபா 100) பெனர் கடவுட் தொடர்பாக (ஒரு சதுர அடிக்கு ரூபா 40)

04. உள்ளூராட்சி நிறுவனத்தினால் அமைக்கப்படும் பாரிய விளம்பரப் பலகையை தொடர்புபடுத்தி காட்சிப்படுத்தப்படும் விளம்பரம் ஒன்றிற்காக ஒரு வருடத்திற்கு
(ஒரு சதுர அடிக்கு ரூபா 75) பெனர் கடவுட் தொடர்பாக (ஒரு சதுர அடிக்கு ரூபா 30)

11-418/7

**கொட்டபொல பிரதேச சபை**

வேறு கட்டணங்கள் அறவிடல் -2019

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் கொட்டபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேறு கட்டணங்களை 2019, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் விதித்து அறவிடப்படுவதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

தயாநன்த அபேவிக்ரம,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல, தெனியாய,
2018, ஓகத்து 21.

**தீர்மானம்**

கொட்டபொல பிரதேச சபையினால் 2018 ஆம் வருடத்தின் ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5:5:8 இன் கீழ் மேற்குறித்த கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டதாக பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | ஏ.ரீ. படிவம் (ஒப்பினை சாராம்ச படிவம்) | 150.00 |
| 2. | கட்டிடங்களுக்கான விண்ணப்பக் கட்டணம் | 500.00 |
| 3. | விபத்திற்குறப்பட்ட மரங்களை அகற்றும் விண்ணப்பக் கட்டணம் | |
| | * பலா மரத்திற்கு | 1000.00 |
| | * வேறு மரங்களுக்கு | 250.00 |
| 4. | கட்டிட விண்ணப்பப்பத்திரத்திற்கு திறமைச் சான்றிதழ் பெற | |
| | * வணிக நிலையங்களுக்கு | 1000.00 |
| | * வதிவு நிலையங்களுக்கு | 500.00 |
| 5. | கட்டிட விண்ணப்பப்பத்திரங்களின் காலத்தை நீடிக்க | |
| | ஒரு வருடத்திற்கு | 1000.00 |
| 6. | வரிமதிப்பு சான்றிதழ் கட்டணம் | 150.00 |
| 7. | நீர் சான்றிதழ் கட்டணம் | 100.00 |
| 8. | வீதி ரேகா மற்றும் எடுத்துக்கொள்ளப்படா சான்றிதழ் தொடர்பாக | 500.00 |
| 9. | வீதியில் நடமாடும் கால் நடைகளுக்கு (ஒரு கால் நடைக்கு) | 500.00 |
| 10. | காணி துண்டாக்கல் விண்ணப்பம் தொடர்பாக கட்டணம் | 300.00 |
| 11. | காணி வரைபடத்தை அனுமதிப்பதற்காக ஒரு காணித் துண்டு தொடர்பாக | 500.00 |
| 12. | காணிகளை துண்டாக்கியதன் பின்னர் காணி வரைபடத்தை அனுமதிப்பதற்கான கட்டணம் | |
| | சதுர அடி 150 - 300 வரை | 500.00 |
| | சதுர அடி 301 - 600 வரை | 400.00 |
| | சதுர அடி 601 - 900 வரை | 300.00 |
| | சதுர அடி 900 க்கு மேல் | 200.00 |
| 13. | அலுவலக ஆவணப் பிரதிகள் பெற்றுக் கொள்ளல் | 150.00 |
| 14. | சபைக்குரிய நிலங்களை ஊக்குவிப்பு முயற்சிகளுக்கு பெற்றுக் கொடுத்தல் | |
| | (ஒரு நாளைக்கு) | 1000.00 |
| 15. | சபைக்குரிய மண்டபங்கள் உட்பட பிரதான கேட்போர் கூடத்தை குத்தகைக்கு விடல் | |
| | (ஒரு நாளைக்கு) | 5000.00 |
| 16. | கேட்போர் கூடத்திற்காக சபையின் பயிற்சியாளர்களின் உதவியைப் பெற | |
| | (ஒரு நாளைக்கு) | 1500.00 |

| | | |
|---|---|---|
| 17. | கைத்தொழில் தொடர்பாக அறவிடப்படும் ஆவணங்களுக்கான மற்றும் நலன்புரி சேவைக் கட்டணம் | |
| | சமூக சங்கங்களினால் நடத்தப்படும் கைத்தொழில்கள் தொடர்பாக | 1000.00 |
| | கொந்திராத்காரர்களினால் நடத்தப்படும் கைத்தொழில்கள் தொடர்பாக | 2000.00 |
| 18. | தகன அறை சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக | |
| | வலுப் பிரதேசத்தில் வதியும் நிரந்தர வதிவாளரின் மரணம் ஒன்றிற்காக | 6000.00 |
